# தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷன் லிமிடெட்

11/22, மாங்காடு சாமி தெரு, நுங்கம்பாக்கம், சென்னை-600 034.
தொலைபேசி எண் 044-28221233 தொலைநகல் 044-28253021

TACTV

## உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் (LCO), பன்முனை கேபிள் ஆப்பரேட்டர்கள் (MSO) மற்றும் தனியார் உள்ளூர் தொலைக்காட்சி உரிமையாளர்களுக்கு (PLC)

## முக்கிய அறிவிப்பு

******

குறைந்த கட்டணத்தில் நிறைவான கேபிள் டிவி சேவையை பொதுமக்களுக்கு வழங்கும் உயரிய நோக்கத்துடன் தமிழகம் முழுவதும் கேபிள் டிவி சேவையினை மாதம் ரூ.70/- என்ற கட்டணத்தில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் வழங்கும் என **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் அறிவித்தார்கள். அதன்படி, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் கேபிள் டிவி சேவையை அளித்து வருகிறது.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் ஏற்கனவே, **17.11.2013** அன்று வெளியிட்ட செய்தித்தாள் விளம்பரத்தின்படி மாதாந்திர கட்டணத்தொகை ரூபாய் ஐந்தாயிரத்திற்கு (ரூ.5000/- மேல் செலுத்த வேண்டிய உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் (LCO), பன்முனை கேபிள் ஆப்பரேட்டர்கள் (MSO) மற்றும் தனியார் உள்ளூர் தொலைக்காட்சி உரிமையாளர்கள் (PLC), 01.01.2014 முதல் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு நேரடியாக ஆன்லைன் (Net Banking) முறையில் **www.tactv.in** என்ற இணையதளத்தின் மூலம் மட்டுமே செலுத்த முடியும் என்றும் இந்நிறுவனத்தில் பதிவு செய்துள்ள **அனைத்து** உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் (LCO), பன்முனை கேபிள் ஆப்பரேட்டர்கள் (MSO) மற்றும் தனியார் உள்ளூர் தொலைக்காட்சி உரிமையார்கள் (PLC), **01.03.2014** முதல் ஆன்லைன் **(Net Banking)** முறையில் மட்டுமே மாதாந்திர கட்டணம் செலுத்த இயலும், **01.03.2014** முதல் சலான் மூலம் மாதாந்திரக் கட்டணம் செலுத்த வசதி இருக்காது என்றும் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலும் தற்போது ஆன்லைன் **(Net Banking)** வசதியினை விரிவுபடுத்தும் வகையில் **14.01.2014** முதல் **டெபிட் கார்டு (Debit Card)** மற்றும் **கிரெடிட் கார்டு (Credit Card)** மூலமும் கட்டணத்தொகையை செலுத்தவும் வசதி செய்து தரப்பட்டுள்ளது. **எனவே அனைத்து உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் (LCO), பன்முனை கேபிள் ஆப்பரேட்டர்கள் (MSO) மற்றும் தனியார் உள்ளூர் தொலைக்காட்சி உரிமையாளர்கள் (PLC) 14.01.2014 முதல் ஆன்லைன் முறையிலோ அல்லது டெபிட் கார்டு (Debit Card) மற்றும் கிரேடிட் கார்டு (Credit Card) முறையில் மட்டுமே உரிய கட்டணத்தை செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

**மேலாண்மை இயக்குநர்**

**செ.ம.தொ.இ/ /வரைகலை/2013**